**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண் 46/2023**
**நாள் 26/11/2025 புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – மல்லிகாஜூனா (PW1) | த/பெயர் – சந்திரன் |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**முதல் விசாரணை–**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். மனுதாரர்தரப்பு சான்றாவணங்கள் கீழ்க்கண்டவாறு குறியீடு செய்யப்படுகிறது.

1. (1). முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா ஆ 1** ஆகவும்,

(2). 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்று நகல் **ம.சா ஆ 2** ஆகவும்,

(3). 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு சான்று நகல் **ம.சா ஆ 3** ஆகவும்,

(4). 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் **ம.சா ஆ 4** ஆகவும்,

(5). மருத்துவ விடுவிப்பு அறிக்கை அசலுடன் சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா ஆ 5** ஆகவும்,

(6). மனுதாரரின் ஆதார் அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா ஆ 6** ஆகவும்,

(7). தொடர் சிகிச்சை ஆவணம் அசலுடன் சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா ஆ 7** ஆகவும்,

(8). மருத்துவ விடுவிப்பு அறிக்கை நகல் **ம.சா ஆ 8** ஆகவும்,

(9). மருத்துவ விடுவிப்பு அறிக்கை அசலுடன் சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா ஆ 9** ஆகவும்,

(10). தொடர் சிகிச்சை ஆவணம் அசலுடன் சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா ஆ 10** ஆகவும்,

(11). கதிரியக்கபடம் **ம.சா ஆ 11** ஆகவும்,

(12). மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் **ம.சா ஆ 12** ஆகவும்,

(13). மருத்துவ ரசீதுகள் அசல் **ம.சா ஆ 13** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மனு படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(ம.சா ஆ 8 நகல் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்குஉட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது).

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

1. விபத்து சமயத்தில் எந்த வாகனத்தில் பயணம் செய்தேன் என்றால் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்தேன். அதில் எத்தனை நபர்கள் சென்றோம் என்றால் 4 நபர்கள் சென்றோம். வாகனத்தை யார் ஓட்டி சென்றார்கள் என்றால் நான் தான் ஓட்டிச் சென்றேன். எனக்கு இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது, அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எப்போது எங்கு விபத்து நடந்தது என்றால் 24.09.2022 தேதியன்று ரேனுகுண்டாவில் இருந்து காலஹஸ்தி நோக்கி நான் இருசக்கர வாகனத்தை ஓட்ட என்னுடன் என் மனைவி, மைத்துநர் மனைவி, மற்றும் 5 வயதுடைய என் மைத்துநரின் குழந்தை ஆகியோர்கள்

சென்றுக்கொண்டிருந்தபோது உகாதி ஓட்டல் எதிரே எதிரே வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டது. அந்த காரின் பதிவு எண் AP 03 TV 6474 ஆகும்.

2. நடந்த விபத்தில் எனக்கு என்ன காயம் ஏற்பட்டது என்றால் வலது தொடையில் 7 இன்ச் அளவில் எலும்பு நொருங்கிவிட்டது, முட்டிக்கு கீழ் உள்ள இரு எலும்புகளும் உடைந்துவிட்டது. எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் திருப்பதி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு, இரமாதேவி தனியார் மருத்துவமனையில் ஒருவாரம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மேற்கொண்டு சென்னை இராஜிவ்காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அதன் பின்னர் வேல்ஸ் தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மேலும் இராஜிவ் காந்தி அரசு மருத்துவமனையில் தொடர்சிகிச்சை பெற்று வருகிறேன்.

3. எனக்கு அறுவை சிகிச்சை எதுவும் செய்யப்பட்டதா என்றால் ஆமாம், வேல்ஸ் மருத்துவமனை மற்றும் இராஜிவ் காந்தி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு தகடு பொருத்தப்பட்டது. விபத்து சம்மந்தமாக யார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் என் தந்தை கொடுத்தார். 2 நாட்கள் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் எதுவும் அளித்துள்ளேனா என்றால் இல்லை. இருசக்கர வாகனத்தில் 4 நபர்கள் பயணம் செய்து அதிவேகமாக ஓட்டிச்சென்றதால் தான் நிலைதடுமாறி எதிரே வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல.

4. நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை மனுவில் தரப்பினராக சேர்த்திருக்கவேண்டும் என்றும் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எனக்கு எந்த நஷ்ட ஈடும் வழங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடன் பயணம் செய்துள்ள 3 நபர்களும் நஷ்ட ஈடு கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு எவ்வளவு வயது என்றால் 37 வயது, லாரி ஓட்டுநராக வேலை பார்த்து நாள் ஒன்றிற்கு ரூபாய் 1500/– சம்பாதித்து வந்தேன். மாதத்தில் ஞாயிற்று கிழமை தவிர மற்ற அனைத்து நாட்களிலும் வேலைக்கு செல்வேன்.

5. என்னுடைய வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை நிரூபிக்கும் வகையில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய கவனக்குரைவால் நானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு வழங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**